**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி**
**முன்னிலை – திருமதி.P. கனிமொழி , B.L.,**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
2025 ம் ஆண்டு ஜூன் மாதம் 5 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவர் ஆண்டு 2056, விசுவாவசு வருடம் வைகாசி 22 ம் நாள்
**இ.ம.எண். 1/2024**
**இல்**
**அசல் வழக்கு எண். 73/2019**

பத்மநாபன் ..மனுதாரர்/வாதி

//எதிர்//

பரிமேலழகன் மற்றும் பலர் ..எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

இம்மனுவானது இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 05.062025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. S. பாலச்சந்திரன், அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு. G. ராஜேஷ், அவர்கள் ஆஜராகியும் வழக்கு ஆவணங்களை பரிசீலித்தபின் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

**உத்தரவு**

இம்மனுவானது வாதி தரப்பில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி DW2 சாட்சியான ஜோதியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய தக்க உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுவின் சுருக்கம்:**

2. மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி ஆவார். தான் வழக்கிடை சொத்தில் தனக்குரிய பாகத்தை பிரித்து கொடுக்க கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும், அதில் வெகு நாட்களுக்கு பின்னர் பிரதிவாதி தரப்பு 2வது சாட்சியாக ஜோதி என்பவர் முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளதாகவும், இந்தவிபரம் வாதி தரப்பிற்கு தெரிவிக்கப்படவில்லை என்றும், அதன் காரணமாக 19.08.2022 அன்று வாதி தரப்பில் 2வது பிரதிவாதி தரப்பு சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை என கூறி விசாரணை முடித்து வைக்கப்பட்டுள்ளதாகவும், இந்த சாட்சியின் முதல் விசாரணையே முழுமை பெறாமல் உள்ளது என்றும், 2வது சாட்சி

விசாரணை செய்த விபரம் தெரியாததால் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய முடியவில்லை என்றும், எனவே, வாதி தரப்பில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி DW2 சாட்சியான ஜோதியை மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய தக்க உத்தரவு பிறப்பிக்கக்கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிருரையின் சுருக்கம்:**

3. இம்மனு சட்டப்படிக்கும் நியாயபடிக்கும் நிலை நிற்கத்தக்கதல்ல. மனுதாரர் அபிடவிட் மற்றும் மனுவில் சொல்லியுள்ள விபரங்கள் உண்மையல்ல என்றும், அவைகளை 1,2 ம் எதிர்மனுதாரர்கள் மறுப்பதாகவும், மனுதாரர் அபிடவிட் பத்தி 2ல் சொல்லியுள்ள பெரும்பாலான விபரங்கள் உண்மையல்ல என்றும், அபிடவிட்டில் பிரதிவாதி தரப்பு 2வது சாட்சியாக இந்த 1,2 ம் எதிர்மனுதாரர் விசாரணை செய்யப்பட்டுள்ளார் என்பது மட்டுமே உண்மை என்றும், அது தவிர ஏனைய விபரங்கள் உண்மையல்ல என்றும், முதல் விசாரணை செய்யப்பட்ட விபரம் வாதிக்கு தெரிவிக்கப்படவில்லை என சொல்லியுள்ளது உண்மையல்ல என்றும், ஒருக்கால் அது உண்மையாக இருக்கும்பட்சத்தில் வாதி தனது வழக்கினை நடத்துவதில் மிகவும் அலட்சியமாக செயல்பட்டு வந்துள்ளார் என்பது தெளிவாகிறது என்றும், மேலும் 19.08.2024 அன்று வாதி தரப்பில் 1,2 ம் எதிர்மனுதாரரை குறுக்கு விசாரணை செய்யவில்லை என சாட்சி விசாரணை முடித்து வைக்கப்பட்டுள்ளதாகவும், மனுதாரர்/வாதி கேட்ட மாத்திரத்தில் இந்த மனு அனுமதிக்கக்கூடியதில்லை என்றும், அவர் வழக்கின் மீது அவருக்கு அக்கறை இல்லாமல் இருந்துள்ள நிலையிலும் அசல் வழக்கு தாக்கல் செய்து 10 ஆண்டுகள் ஆகிவிட்ட நிலையிலும் இந்த எதிர்மனுதாரரை கஷ்ட நஷ்டபடுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனுதாரர்/வாதியால் வேண்டுமென்றே குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்துவிட்டு காலதாமதமாய் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே, இந்த மனுவினை கூடுதல் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது, இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதேயாகும்.

**தீர்வு:**

5. மனுதாரர் தரப்பில், மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக பாகப்பிரிவினை கூறி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், பிரதிவாதி தரப்பு 2வது சாட்சியாக ஜோதி என்பவர் முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார், இந்த விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படவில்லை. எனவே, மனுதாரர் தரப்பில் பி.வா.சா. 2ஐ குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும், எனவே, குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளதாகவும், அவரை மீண்டும் அழைத்து மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது என கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர் தரப்பில், மனுதாரர் அவரது அபிடவிட்டில் பி.வா.சா 2 ஐ விசாரணை செய்த விபரமே மனுதாரருக்கு தெரியாது என்றும், அதனால் வாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய இயலவில்லை என்றும் தெரிவித்துள்ளார், இது மனுதாரர் தாக்கல் செய்த வழக்கின் மீது அவருக்கு எவ்வித அக்கறையும் இல்லாமல் இருந்து வருகிறது என்பதை காட்டுகிறது. அசல் வழக்கு தாக்கல் செய்து 10 வருடங்கள் ஆகிய நிலையில் எதிர்மனுதாரரை கஷ்ட நஷ்டப்படுத்த வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் பி.வா.சா. 2ஐ குறுக்கு விசாரணை செய்யாமல் இருந்துவிட்டு தற்போது காலதாமதமாக தாக்கல் செய்துள்ளதால் இந்த மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

8. மனுதாரர் தரப்பில் பி.வா.சா. 2 ஐ மீண்டும் அழைத்து குறுக்கு விசாரணை செய்ய வேண்டும் என கோரி இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். கடந்த 26.02.2024 அன்று பி.வா.சா. 2 முதல் விசாரணை பகுதியாக செய்யப்பட்டு மேலும் அவரை முதல் விசாரணை செய்ய பல வாய்தாக்கள் போடப்பட்டு அவர் நீதிமன்றத்தில் ஆஜராகததால் கடந்த 25.04.2024 அன்று இந்நீதிமன்றத்தால் முதல் விசாரணை முடிக்கப்பட்டு குறுக்கு விசாரணைக்கு போடப்பட்டு அவர் ஆஜராகாததால் கடந்த 08.08.2024 அன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டு 19.08.2024 அன்று அவர் நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார் அன்றைய தினம் வாதி தரப்பில் ஆஜராகி பி.வா.சா. 2ஐ குறுக்கு விசாரணை செய்யாததால் அவரது குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டுள்ளது. தற்போது மனுதாரர்/வாதி பி.வா.சா. 2ஐ

குறுக்கு விசாரணை செய்ய வேண்டியது அவரது தரப்பை நிரூபிக்க அவசியமாக உள்ளது என கூறப்பட்டுள்ளது. வாதி கூறும் காரணம் ஏற்புடையதாக உள்ளது என்றும், மனுதாரருக்கு பி.வா.சா. 2 ஐ குறுக்கு விசாரணை செய்வதற்கு ஒரு வாய்ப்பு அளிப்பதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்றும், இந்த வழக்கினை முழுமையான தீர்வு காண்பதற்கு சரியாக இருக்கும் என்றும் இந்நீதிமன்றம் கருதுவதால் இம்மனுவை அனுமதிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. இம்மனுவை அனுமதிப்பதால் எதிர்மனுதாரருக்கு எவ்வித பாதிப்பும் ஏற்படபோவதில்லை.

**9. முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இந்த உத்தரவு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் இன்று சரிபார்க்கப்பட்டு, பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 05.06.2025 இல் திறந்த நீதிமன்றத்தில் அவை அறியப் பகரப்படுகின்றது.

ஒப்பம் (P. கனிமொழி)
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**

**இணைப்பு :**

மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர் மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ஒப்பம் (P. கனிமொழி)
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**தரங்கம்பாடி.**